## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 342/2025** |
| Prosecution witness | : | P.W. 5 |
| List of witness | : | L.W.9 |
| Name | : | வசந்த் |
| Father's /Husband Name | : | செல்வமணி |
| Village | : | அன்னவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 26 |
| Occupation | : | தனியார்ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 27th day of April 2026. A2 to A4 present. A1 absent. Petition U/s. 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா அன்னவாசல் கிராமத்தில் வசித்து வந்து தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள். அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக நினைவில்லை மாலை நேரத்தில் நான், லெட்சுமணன், கௌதமன், தாமோதரன் மற்றும் குமரகுரு ஆகியோர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்த போது சுமார் பத்து பேர் கூட்டமாக சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவ்வழியில் சென்ற போது கூட்டத்தில் சில பேர் எங்களை தாக்கினார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ம் எதிரிகளும் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது சமாதானம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான்.

கடந்த 04.11.2021 ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த ராமச்சந்திரன் மகன் ராம்கீ என்பவர் மழவஞ்சேரி அருகே நடந்து சென்ற போது அங்கு குடியில் போதையில் நின்று 1 ஆம் எதிரியும் அவரது நண்பர்களும் ராம்கீயிடம் வம்பு இடத்தில் திட்டினார்கள் என்றும், அவர் அ.சா.1 டம் தெரிவித்தார் என்றும், நாங்கள் கேட்டு கொண்டிருந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த இரண்டு முதல் 4 எதிரிகள் மற்றும் இளம்பிழையான விஷ்னு, ஈஸ்வரன் அன்னவாசல் பள்ளியின் அருகே நடந்து சென்ற சகுந்தலா என்பவர் மீது மோதி விட்டனர் என்றும், அப்போது அங்கு இருந்த எங்கள் ஊராட்சி மன்ற உறுப்பினர் சரிதா மற்றும் அவரது கணவர் அன்பழகன் மற்றும் கௌதமன் ஆகியோர் ஏன் இப்படி வேகமாக வண்டியை ஓட்டுகிறீர்கள் என்று கேட்ட போது அ.சா.1 ஐ குச்சிகாரி தேவுடியா மகன்களே என திட்டினார்கள் என்றும், 1 ஆம் எதிரி அ.சா.1 ஐ முதுகில் குத்தினார் என்றும், அவரோடு வந்த இளம்பிழையாளியான விஷ்னுவும், ஈஸ்வரனும் அங்கிருந்த கட்டயை எடுத்துக்கொண்டு என்னையும் தாமோதரன் மற்றும் கௌதமனையும் அடித்தார்கள் என்றும், இரண்டாம் எதிரியும் மூன்றாம் எதிரியும் கல்லால் குமரகுருவையும் இராம்கீயையும் அடித்தார்கள் என்றும், நான்காம் எதிரி பிரபாகரன், கையாலும் காலாலும் மதியழகனையும் கதிரேசனையும் அடித்தார்கள் என்றும், அதில் அ.சா.1 க்கு முதுகில் காயமும் கௌதமனுக்கு தலையில் இரத்த காயமும் குமரகுருவுக்கும் இராம்கீக்கும் நெஞ்கில் உள் காயமும் எனக்கு வலது தோள்பட்டையில் உள் காயமும், தாமோதரனுக்கு தோள் பட்டையில் உள் காயமும் கதிரேசன் என்பவருக்கு இடது தோள்பட்டை கையில் உள்காயமும், மதியழகனுக்கு வலது தொடையில் உள் காயமும் ஏற்பட்டது. நாங்கள் சத்தம் போடவே ஆஜர் எதிரிகள் கட்டையை காட்டி எங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றும், பிறகு எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தோம் என்றும், மேற்படி சம்பவத்தில் எதிரிகளும் இளம்பிழையாளியான விஷ்னு மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் இராம்கீயின் TN 21 AZ 7304 BAJAJ DISCOVER இருசக்கர வாகனத்தை உடைத்து விட்டனர் என்றும், புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :- இல்லை.

**மறு விசாரணை** :- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.27 14:54:13 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.